வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.221/20

வழக்கு சாட்சி - அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துலோகேஷ்வரி | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of . 08.05.23

**(** எதிரி ஆஜர்**. )**

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ஜவகர் நகர் பிசிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்துவருகிறேன். 29.5.20 அன்று இரவு சுமார் 7.30 மணியளவில் நானும் எனது அப்பா முருகன், எனது அம்மா முருகேஷ்வரி, எனது அக்கா பாண்டிஸ்வரி ஆகியோர் எனது வீட்டில் இருந்த போது மகேஷ்வரன் என்பவர் எங்களது வீட்டிற்கு வந்து எங்களை பார்த்து அசிங்கமாக பேசினார். தேவிடியா மகனே வெளியோ வா தைரியமான ஆளா இருந்த வெளியே வந்து பேசு என்று அசிங்கமாக பேசினார். அதன்பின்னர் சுமார் 8 மணியளவில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து மகேஷ்வரன் எனது அப்பாவின் இடது பக்க இடுப்பில் குத்திவிட்டார். மேலும் மகேஷ்வரன் எனது அப்பாவை பார்த்து சொத்து சம்மந்தமாக பிரச்சனை செய்தால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார். எனது அப்பா மயக்கமடைந்துவிட்டார். எனது அப்பாவை ஆட்டோவில் அழைத்து சென்று க.விலக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். சிகிச்சையிலிருந்து போது விசாரிக்க வந்த போலிசாரிடம் எனது அப்பா புகார் வாக்குமூலம் கொடுத்தார். புகார் வாக்குமூலத்தில் நான் சாட்சி கையெப்பமிட்டேன். புகார்வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். புகார் அசாஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.